# 45

# “கர்த்தாவே, எங்கள் கண்களைத் திறந்தருளும்!”

## (14:1-5)

*ஆராம்[1] (நாட்டின்) அரசன் எலிசாவின்மீது மகிழ்ச்சியாய் இருக்கவில்லை, ஏனென்றால் அந்தத் தீர்க்கதரிசியானவர், இஸ்ரவேல் நாட்டிற்கு எதிரான அவனது ஒவ்வொரு அசைவையும் முன்னுரைத்திருந்தார். ஆகையால் அந்த அரசன் எலிசாவைக் கண்டுபிடிப்பதற்கு “குதிரைகளையும் இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான், அவர்களும் இராக்காலத்திலே வந்து பட்டணத்தை வளைந்து கொண்டார்கள்” (2 இராஜாக்கள் 6:14). அடுத்த நாள் காலையில், எலிசாவின் ஊழியக்காரன் வெளியே சென்றபோது, “இராணுவமும் குதிரைகளும் இரதங்களும் பட்டணத்தைச் சுற்றிக்கொண்டிருக்கக் கண்டான்.” அவன் உடனே வீட்டின் உட்புறம் துரிதமாய் வந்து, “ஐயோ, ... ! என்ன செய்வோம்?” என்று கதறினான் (வசனம் 15).*

*அதற்குத் தீர்க்கதரிசி, “பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்” என்று பதில் அளித்தார் (வசனம் 16). ஊழியக்காரன் திகைப்படைந்திருப்பான் என்பதில் சந்தேகமில்லை. அங்கு விரோதிகள் நூற்றுக்கணக்கில் இருந்தனர், அவர்களோ இருவர் மாத்திரமே இருந்தனர்! பின்பு எலிசா, “விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்” என்றார். உடனே ஊழியக்காரனின் கண்கள் திறக்கப்பட்டன, “இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருந்ததை அவன் கண்டான்” (வசனம் 17).*

*வெளிப்படுத்தின விசேஷம் 12 மற்றும் 13ம் அதிகாரங்கள், வலுசர்ப்பம், மிருகம் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசி என்ற பரிசுத்தமற்ற திரித்துவத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டன: அவர்களின் வல்லமை மற்றும் செல்வாக்குப் பற்றிய ஒரு விரிவான, பயமுறுத்தவும் கூடியதான ஒரு சித்தரிப்பை யோவான் வரைந்தார். அவர், “பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி” என்று வலியுறுத்தினார் (13:3ஆ). கும்பலின் உச்சாடனத்தை அவர் பதிவு செய்திருந்தார்: “மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்?” (வசனம் 4ஆ). மிருகமானது, “பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்” என்று அவர் குறிப்பிட்டு இருந்தார் (வசனம் 7அ).*

ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் கதறுதலைக் கேளாமல், வேதசாட்சிகளாக மரித்தவர்களின் இரத்தம் பூமியில் பரவியிருப்பதைக் காணாமல், வெளிப்படுத்தின விசேஷம் 13ஐ வாசித்தல் என்பது கடினமானதாக இருக்கும்.

யோவானின் நாட்களில் நான் வாழ்ந்திருந்தால், அனேகமாக நான், எலிசாவின் ஊழியக்காரனைப் போலவே இருந்திருப்பேன்: வரையறையற்றதாகக் காணப்படும் விரோதியின் ஆதாரமூலங்களை மாத்திரம் காணக்கூடியவனாக இருந்திருப்பேன். "ஐயோ! நாம் என்ன செய்வோம்?" என்று நான் கதறியிருப்பேன் என்பதைக் கற்பனை செய்ய முடிகிறது. எலிசா தமது ஊழியக்காரனுக்குக் கொடுத்திருந்த உட் கண்ணோட்டம் எனக்குத் தேவையாய் இருந்திருக்கும்: "பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்.'' யோவானின் வாசகர்களுக்கு இதே கருத்துநோக்கத்தைக் கொடுத்தல் என்பதுதான் வெளிப்படுத்தின விசேஷம் 14ன் நோக்கமாக இருந்தது.

14ம் அதிகாரத்தின் செய்தி இன்றைய நாட்களிலும் தேவைப்படுகிறது. நம்மைச் சுற்றிலும் உள்ள தீமையினால் நாம் மேற்கொள்ளப்படும்போது, தேவன் அளிக்கின்ற தெய்வீக ஆதாரமூலங்களுக்கு நமது கண்கள் திறக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. ''அவர்களோடிருக் கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்" என்பதை நாம் இன்னமும் புரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

14ம் அதிகாரம் இயல்பாகவே மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ளது,[2] ஒவ்வொரு பிரிவும் "நான் கண்டேன்" என்று அல்லது அதற்குச் சமமான வார்த்தைகளுடன் தொடங்குகிறது.[3] யோவான், தாம் கண்டதை தமது வாசகர்கள் காண வேண்டும் என்று விரும்பினார். தேவன் தமது மக்களுக்காக இருப்பில் வைத்துள்ளது என்ன என்பதைக் காண்பதற்கு - மற்றும் அவர்களின் விரோதிகளுக்காக அவர் இருப்பில் வைத்துள்ளது என்ன என்பதைக் காண்பதற்கும் - அவர்களின் கண்கள் திறக்கப்பட வேண்டும் என்று விரும்பினார். இந்த எடுத்துரைப்பில் நாம், முதலாவது பிரிவைப் பற்றிப் படிப்போம். மற்ற இரண்டு பிரிவுகளையும் நாம் பின்தொடரும் பாடத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.[4]

## "கர்த்தாவே, வெற்றியின் நிச்சயத்தன்மைக்கு எங்கள் கண்களைத் திறந்தருளும்" (14:1)

13ம் அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டபடி, மிருகமானது பூமியின்மீது கட்டுப்பாடு செலுத்தியது பற்றி வலுசர்ப்பம் பெருமிதம் அடைந்திருக்க வேண்டும். பூமியின் மீதெங்கும் அந்தகாரம் பரவியிருந்தது, தீமையானது மனிதர்களின் இருதயங்களை நிரப்பியிருந்தது. திரளான மக்கள் கூட்டமானது, சிந்தையில்லாத எந்திர மனிதர்கள்[5] போல், மிருகத்தின் கட்டளை ஒவ்வொன்றிற்கும் கீழ்ப்படிந்து, நாட்டில் எங்கும் நடமாடிக் கொண்டிருந்தது. இருப்பினும், 14ம் அதிகாரத்தின் தொடக்கத்தில்,

மலைகளின்மீது திடீரென்று பரலோகக் கதிரொளி வீசி, சுற்றிலும் இருந்த சமவெளிகளை நிரப்பியதாகக் காணப்படுகிறது. அந்தகாரத்திற்கு மேலே ஆட்டுக்குட்டியானவர் தமது மக்களுடன் வெற்றிகரமாய் நின்றிருந்தார்! ''பின்பு நான் பார்த்தபோது, இதோ,[6] சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட ... இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்'' (வசனம் 1). (''சீயோன் மலையின்மீது ஆட்டுக்குட்டியானவர் 144,000 பேர்களுடன் நிற்குதல்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.)

வெளிப்படுத்தின விசேஷத்தில் இதற்கு முன்னதாக நாம், இந்தக் காட்சியில் தோன்றும் கலைஞர்களைச் சந்தித்தோம். ஆட்டுக்குட்டியானவர் இயேசு கிறிஸ்துவே. 5ம் அதிகாரத்தில் அவர், ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகத்தைத் திறக்கப் பாத்திரமான ஆட்டுக்குட்டியாகச் சித்தரிக்கப்பட்டிருந்தார். 7ம் அதிகாரத்தின் கடைசிப் பகுதியில், ஆட்டுக்குட்டியானவருக்கும், அரியணைக்கும் முன்பாக திரளான மக்கள் கூட்டம் நின்றுகொண்டு துதிகள் பாடியது. 6, 12 மற்றும் 13ம் அதிகாரங்களிலும் ஆட்டுக்குட்டியானவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

7ம் அதிகாரத்தின் முதல் பகுதியில் நாம் 144,000 பேர்களைச் சந்தித்து, அவர்கள் தேவனுடைய மக்களைக் குறித்தனர் என்று கருத்துத் தெரிவித்தோம்.[7] அவர்கள் தங்கள் நெற்றிகளில் முத்திரையிடப்பட்டு இருந்தனர், அது அழிவின் காற்று அடிக்கத் தொடங்குகிறபோது, அவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று சுட்டிக்காண்பித்தது. 14:1ல் நாம், அவர்கள் சீயோன் மலையின்மீது இயேசுவுடன் வெற்றிவீரர்களாக நின்று கொண்டிருக்கக் காணுகின்றோம். 14ம் அதிகாரத்தில் "144,000"[8] என்ற அடையாளத்துவ எண் மறுபடியும் கூறப்படுதலானது, 13ம் அதிகாரத்தின் மிருகங்கள் எவ்வளவு வெற்றிகொள்ளப்பட முடியாதவர்களாகக் காணப்பட்டாலும், உண்மையுள்ள யாவரும் இயேசுவுடன் வெற்றியாளர்களாய் இருப்பார்கள் என்பதை வலியுறுத்துகிறது. ஒருவர் கூட இழந்துபோகப்படமாட்டார்!

7ம் அதிகாரத்தில், 144,000 பேர்களும் தங்கள் நெற்றிகளில் ஒரு முத்திரையைக் கொண்டிருந்தனர்; 14ம் அதிகாரத்தில் அவர்கள், ஆட்டுக்குட்டியானருடைய பெயரையும், "அவருடைய பிதாவின் நாமமும் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தவர்களாய்" இருந்தனர் (வசனம் 1ஆ). முத்திரையும் பெயரும் இரண்டு வித்தியாசப்பட்ட விஷயங்களைக் குறிப்பதில்லை, ஆனால் ஒரே விஷயத்தின் இரண்டு வித்தியாசப்பட்ட அம்சங்களைக் குறிக்கின்றன: முத்திரை பாதுகாப்பை வலியுறுத்துகிறது; நாமம் உரிமைத்துவத்தை வலியுறுத்துகிறது. 3ம் அதிகாரத்தில் இயேசு, ''ஜெயங்கொள்ளுகிற யாவருக்கும்'' பின்வரும் வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தினார்: ''என் தேவனுடைய நாமத்தையும் ... என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்" (வசனம் 12). 14ம் அதிகாரம், அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்தைக் காண்பிக்கிறது. தேவன் ஒரு வாக்குத்தத்தத்தை ஏற்படுத்துகின்றபோது, நீங்கள் அதில் நிச்சயமாய் இருக்க முடியும்.

14:1-5ன் கலைஞர்களை நாம் முன்பு சந்தித்து இருக்கலாம், ஆனால் இப்போது காட்சியானது புதிதாக உள்ளது: அவர்கள் "சீயோன் மலையின் மீது நின்று" கொண்டிருந்தனர். வெளிப்படுத்தின விசேஷத்தை நாம் ஒவ்வொரு அதிகாரமாகக் கடந்து வருகையில், பழைய ஏற்பாட்டில் பழக்கம் உடையவர்களுக்கு விசேஷித்த சிறப்புத்தன்மையுடைய பல அடையாளங்களை எதிர்கொண்டிருக்கின்றோம். சீயோன் மலை என்பதைக்காட்டிலும், பழைய ஏற்பாட்டின் வேறு எந்த உருவகமும் அதிக பொருட்செறிவு உடையதாக இருந்திராது.

சீயோன் என்பது எருசலேமின் வடகிழக்கில் உள்ள மேடாக இருந்தது, இது தாவீதினால், அவர், இஸ்ரவேல் இராஜ்யம் முழுமைக்கும் அரசரானபின்பு பிடிக்கப்பட்டதாக இருந்தது.[9] பிற்பாடு இது, தேவாலயம் கட்டப்படுவதற்கான இடமாகத் தாவீதால் தேர்ந்து கொள்ளப்பட்டது. யூதத்துவச் சிந்தனையில், சீயோன் மலை என்பது உலகத்திலேயே மிகவும் பரிசுத்தமான இடமாக, தேவன் தமது மக்களைச் சந்திக்கும் இடமாக இருந்தது.[10] பழைய ஏற்பாட்டின் பிந்திய எழுத்துக்களில் சீயோன் என்பது நம்பிக்கையின் அடையாளமாயிற்று, சீயோனிலிருந்து இரட்சிப்பு வரும் (சங்கீதம் 14:7). மீட்பர் சீயோனுடன் இணைவு கொண்டிருப்பார் (ஏசாயா 59:20).[11]

புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அடையாளத்துவத்தை (தொடர்ந்து) தேர்ந்து கொண்டனர். மேசியாவைத் தேவன், "பரிசுத்த பர்வதமாகிய சீயோன் மீது" முடிசூட்டுவார் என்று 2ம் சங்கீதம் கூறியிருந்தது (வசனம் 6). புதிய ஏற்பாட்டில், இயேசு மரித்தோரில் இருந்து எழுந்து தேவனுடைய வலது பாரிசத்திற்கு ஏறிச்சென்றிருந்தபோது (நடபடிகள் 13:32-37), 2ம் சங்கீதம் நிறைவேற்றப்பட்டதாக ஏவுதல் பெற்ற பிரசங்கியார்களால் மேற்கோள் காண்பிக்கப்பட்டது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தமது வாசகர்கள், அதிர்ந்து நடுங்கும் சீனாய் மலையினிடத்திற்கு வரவில்லை, மாறாக கீழ்கண்டவாறு கூறினார்,

> நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிடத்திற்கும் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், ... வந்து சேர்ந்தீர்கள் (எபிரெயர் 12:22, 23).[12]

இவ்வசனப் பகுதியில், "சீயோன் மலை" என்பது, "பரம எருசலேமுடன்" இணைவு கொண்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். வெளிப்படுத்தின புத்தகத்தின் முற்பகுதியில் இயேசு, "என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரம்" என்பது பற்றிப் பேசியிருந்தார் (3:12). 21ம் அதிகாரத்தில் நாம், "எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை" பற்றி வாசிப்போம். (2 மற்றும் 10ம் வசனங்களையும் காணவும்.)

14ம் அதிகாரத்தின் சீயோன் என்பது "பூமியில் இருந்த இடம்" அல்ல, ஆனால் "ஆவிக்குரிய உண்மை நிலையாக" உள்ளது என்பது தெளிவாய்

இருக்க வேண்டும்:[13] இது தேவன் தமது மக்களுடன் இருக்கும் இடமாக இருந்தது. இது வெற்றியின் இடமாக இருந்தது!

இந்தத் தரிசனத்தில், "சீயோன் மலை" என்பது பூமியின் மீதுள்ளதா அல்லது பரலோகத்தில் உள்ளதா என்பது பற்றி விளக்கவுரையாளர்கள் பிரிவுபட்டு நிற்கின்றனர்.[14] மேலும், இது பரலோகத்தில் இருக்கிறது என்றால், இது யோவானின் நாட்களில் இருந்த உண்மையுள்ள கிறிஸ்தவர்களை[15] மாத்திரம் குறிக்கிறதா அல்லது நித்தியம் முழுவதிலும் பரலோகத்தின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கவிருக்கும் எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிக்கிறதா என்ற கேள்வி நிலைத்துள்ளது. இது மீட்கப்பட்டு பரலோகத்தில் இருக்கப்போகின்ற எல்லாரையும் குறித்த ஒரு தரிசனமாக உள்ளது என்று நான் நம்புகின்றேன். நாம் 7ம் அதிகாரத்தைப் படித்தபோது, மீட்கப்பட்டவர்களை முதலில் நாம், பூமியின்மீது 144,000 பேர்களாகவும் பின்பு பரலோகத்தில் ஆட்டுக்குட்டியானவருக்கும் அரியணைக்கும் முன்பாக எண்ணற்ற மக்கள் கூட்டமாகவும் கண்டோம். இந்த 144,000 பேர்கள் ஆட்டுக்குட்டியானவருக்கும் அரியணைக்கும் முன்பாக இருக்கின்றனர், எனவே இது 7ம் அதிகாரத்தின் மாபெரும் கூட்டத்தினுடைய அதே அடிப்படைக் காட்சியாயிருப்பதாகக் காணப்படுகிறது.[16] இருப்பினும், இந்தத் தரிசனத்தின் முக்கியத்துவமானது, "எப்போது" அல்லது "எங்கே" என்பதில் இராமல், "என்ன" என்பதில் உள்ளது: 144,000 பேர்களும் வெற்றுகொண்டவர்களாய் இருந்தனர்! யோவானின் வாசகர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர், "மிருகத்தினால் பயமுறுத்தப்பட்டிராதீர்கள்! நீங்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்தால், வெற்றிகொள்வீர்கள்!" என்று கூறினார்.

நாம் எப்போதாவது இந்த மாபெரும் சத்தியத்திற்கு நமது கண்களை மூடியிருக்கின்றோமா? நான் இதைச் செய்திருக்கின்றேன் என்பதை அறிந்துள்ளேன், மற்றும் எனது சகோதர சகோதரிகளில் சிலர் எரிச்சல் அடைவதைப் பார்க்கும்போது, மற்றவர்களும் இதைச் செய்துள்ளனரோ என்று நான் அஞ்சுகின்றேன். பின்வருவன போன்ற மாபெரும் வசனப்பகுதிகள் நமக்கு நினைவூட்டப்பட வேண்டியது அவசியமாக உள்ளது:[17]

> கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; ... (1 நாளாகமம் 29:11).
>
> ... ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதிமொழிகள் 21:31).
>
> நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1 கொரிந்தியர் 15:57).

"கர்த்தாவே, வெற்றியின் நிச்சயத்திற்கு எங்கள் கண்களைத் திறந்தருளும்!"

## “கர்த்தாவே, துதியின் மதிப்பிற்கு எங்கள் கண்களைத் திறந்தருளும்” (14:2, 3)

*144,000 பேர்களும், சீயோன் மலையில் நின்று கொண்டிருக்கையில் என்ன செய்து கொண்டிருந்தனர்? அவர்கள் சகிக்க வேண்டியிருந்த இடர்ப்பாட்டை மறுபடியும் நினைக்கின்றீர்களா? மிகவும் அதிகமாகத் துன்புற்றது யார் என்பதைத் தீர்மானிக்க, அவர்கள் போட்டி ஒன்றைக் கொண்டிருந்தனரா? இல்லை, அவர்கள் வெற்றியின் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டு, கொண்டாடிக்கொண்டிருந்தனர். யோவான், “அல்லாமலும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம் போலவும், ஒரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்; நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர் தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசையைப்போலிருந்தது” (வசனம் 2).*

*பலத்த சத்தம் கொண்ட பல்லவியொன்றை[18] யோவான் கேட்டார், அது ஆர்ப்பரிக்கும் அலைகள் அல்லது அடித்து நொறுக்கும் இடிமுழக்கத்திற்கு ஒப்பிடக்கூடிய வகையில் அவ்வளவு வல்லமை நிறைந்ததாகவும், திறமைமிக்க சுரமண்டலக் கலைஞர்களின் இனிமையான இசையுடன் ஒப்பிடக்கூடிய வகையில் அவ்வளவு இன்னொலி கொண்டதாகவும் இருந்தது. அப்போஸ்தலர், உண்மையான தண்ணீர்கள் அல்லது இடிகள் அல்லது சுரமண்டலங்கள் என்பவற்றின் ஒலியைக் கேட்கவில்லை; இவைகள் அந்தப் பாடலின் மகத்துவத்தை விவரிப்பதற்கு ஒப்புமைகளாக மாத்திரம் இருந்தன.[19] பல நூற்றுக்கணக்கான பாடகர்களினால் சேர்ந்து பாடப்படும் பல்லவிகளின் வன்மை மற்றும் வனப்பு ஆகியவற்றினால் நான் பிரமிப்பு அடைந்திருக்கின்றேன். 144,000 பேர்களின் குரல்கள் துதியில் ஒன்றுகூடிக் கலப்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?*

*அவர்களின் (இசை) நிகழ்ச்சிக்கு, “சிங்காசனம் ... நான்கு ஜீவன்கள் ... மூப்பர்கள்”[20] ஆகியோர் “பார்வையாளராக” இருந்தனர் (வசனம் 3ஆ). நாம் 4ம் அதிகாரத்தின் அரியணைக் காட்சிக்குத் திரும்பி, மீண்டும் ஒரு முறை பிதாவின் பிரசன்னத்தில் இருக்கின்றோம்.[21]*

*144,000[22] பேர்கள் பாடிக்கொண்டிருந்த பாடல், ‘‘புதுப்பாட்டு’’ (வசனம் 3அ) என்று அழைக்கப்பட்டது. ‘‘புதுப்பாட்டு’’ என்ற சொற்றொடரானது, பழைய ஏற்பாட்டில், கர்த்தரைத் துதிக்கும் துதியைக் குறிப்பிடுவதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது (சங்கீதம் 33:3; 96:1; 149:1). மற்றும் இது, விடுவித்தல் மற்றும் வெற்றியின் துதிக்கு விசேஷித்த வகையில் பயன்படுத்தப்பட்டது (சங்கீதம் 40:1-3; 144:9-11). எடுத்துக் காட்டாக, சங்கீதம் 98:1ஐக் கண்ணோக்குங்கள், அதில் தாவீது, ‘‘கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார், அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது” என்று எழுதினார். ஒவ்வொரு வெற்றியும் தனிச்சிறப்புடையதாக இருந்ததால், ஒவ்வொரு பாடலும் ‘‘புதியதாக’’ இருந்தது.*

நாம் 5ம் அதிகாரத்தைப் படித்தபோது, நான்கு ஜீவன்களும் இருபத்திநான்கு மூப்பர்களும், ஆட்டுக்குட்டியானவரைத் துதித்து ஒரு "புதுப்பாட்டு" பாடியதைக் கேட்டோம், அதில் பின்வரும் வார்த்தைகள் அடங்கியிருந்தன: "... நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர் ..." (வசனங்கள் 9, 10).[23] 144,000 பேர்களால் பாடப்பட்ட பாடலும் இதே போன்ற ஆய்வுக்கருத்தைக் கொண்டிருந்தது என்பதில் எனக்குத் சந்தேகம் எதுவும் இல்லை.[24] அவர்கள் "ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால்" வெற்றியை ஆதாயப்படுத்தியிருந்தனர் (12:11)!

14ம் அதிகாரத்தின் "புதுப்பாட்டில்" இருந்த மிகச்சரியான வார்த்தைகள் பற்றி நமக்குக் கூறப்படுவதில்லை, ஆனால் "இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது" என்று நமக்கு கூறப்பட்டுள்ளது (வசனம் 3இ). வெற்றியை அனுபவித்தவர்கள் தவிர வேறொருவரும் வெற்றியின் பாடலைக் "கற்றுக்கொள்ளக்" கூடாதிருந்தது. தானியேல் ரஸ்ஸல் என்பவர் கூறியபடி, "சொல்விளக்கத்திற்கு முன்பு அனுபவம் இருக்க வேண்டும்."[25] மையர் பேரல்மென் என்பவர் இந்தச் சிந்தனையை விரிவுப்படுத்தினார்: "நாம் ஒரு சத்தியத்தை உண்மையில் சொல்விளக்கப்படுத்தக் கூடுவதற்கு முன்பு, அதை நாம் அனுபவித்தாக வேண்டும்."[26]

அவ்வப்போது நான், மாபெரும் கலைஞர்களால் பிரபலமான பாடல்களைத் திறமை வாய்ந்த சிறுவர் சிறுமிகள் கொஞ்சும் குரலில் பாடும் இசை நிகழ்ச்சிகளுக்கு நான் சென்றிருக்கின்றேன். அவர்கள், உண்மையில் பாடியவர்களின் குரல்களின் நெளிவுசுளிவுகளைப் போலச் செய்ய முயற்சிக்கின்றனர் மற்றும் சில வேளைகளில் அவர்களின் அசைவுகளையும் போலச் செய்ய முயற்சிக்கின்றனர். அந்தப் பாடல்கள் பெரும்பாலும், காதலைப் பற்றியவையாக, மனம் உடைந்து போகுதலைப் பற்றியவையாக, மற்றும் பெருவருத்தம் மேற்கொள்ளுதல் பற்றியவையாக இருக்கும் விஷயம்தான் என்னை மிகவும் தாக்குகிறது. இந்தக் காட்சிகளை நான் மகிழ்வுடன் அனுபவிக்கின்றேன், ஆனுல் இந்த இளம் நிகழ்ச்சியாளர்கள் தாங்கள் எதைப் பற்றிப் பாடுகின்றோம் என்பது பற்றி எதுவும் அறிவதில்லை என்பது தெளிவு. அவர்கள் வார்த்தைகளையும் இசைலயங்களையும் கற்றிருக்கலாம், ஆனுல் அவர்கள் பாடல்களைக் கற்றிருப்பதில்லை. அந்தப் பாடல்களினால் வெளிப்படுத்தப்படும் உணர்வுகளை அனுபவிக்காத வரையில் அவர்கள் அந்தப் பாடல்களை ஒருக்காலும் கற்றுக்கொள்ள இயலாது.

144,000 பேர்களும், "பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்டவர்களாய்" இருந்தனர் (வசனம் 3ஈ).[27] அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் மகா உபத்திரவத்தில் பிழைத்திருந்தனர். அவர்கள் ஆட்டுக்குட்டியானவருடன் ஜெயங் கொண்டவர்களாய் நின்றனர். வெற்றி என்பது எதைப் பற்றியது என்பதை

அவர்கள் அறிந்திருந்தனர். இவ்விதமாக எவரொருவரும் அவர்களின் "புதுப்பாட்டைக் கற்றுக்கொள்ள" இயலாதிருந்தது.

2 மற்றும் 3 ஆகிய வசனங்களை நாம் விட்டுச்செல்வதற்கு முன்பு, 144,000 பேர்களும் தேவனுக்குத் துதியைப் பாடுதலின் மூலமாக, தங்களின் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர் என்பதைப் புரிந்து கொள்ளுதல் முக்கியமானதாக உள்ளது, ஆராதனை என்பது நேரத்தை வீணாக்குதல் என்று சிலர் நினைக்கின்றனர், ஆனால் 144,000 பேர்களும் அவ்வாறு நினைக்கவில்லை. அவர்களின் நன்றி செலுத்துதலானது பாடலின் சிறகுகளில் தேவனுடைய பிரசன்னத்திற்குள் உயர்ந்து சென்றது. "கிரேக்க தாய் ஒருத்தி தனது பிள்ளை, வாய்க்கால் கரையில் செங்குத்தான பகுதியில் இருப்பதைக் கண்டது பற்றி நமக்குக் கூறப்பட்டுள்ளது. சத்தமிடுதல் என்பது [அந்தப் பிள்ளையைத்] திகைக்கச் செய்து அவன் தலைகீழாக விழக்காரணமாகிவிடும். அவள் நன்கு பழக்கமான ஒரு பாடலைப் பாடத் தனது குரலை உயர்த்தித் தனது பிள்ளையைத் தன்பக்கமாய் திருப்பி காப்பாற்றினாள்."[28] துதியின் பாடல் நம்மைப் படைத்த தேவனிடத்தில் இயல்பாகவே நாம் நெருங்கிச் சேர செய்கிறது. துதியானது நமது இருதயங்களை மேல்நோக்கி உயர்த்தி நமக்கு பலம் அளிக்கிறது.

"கர்த்தாவே, துதியின் மதிப்பிற்கு எங்கள் கண்களைத் திறந்தருளும்."

## "கர்த்தாவே, பண்பின் முக்கியத்துவத்திற்கு எங்கள் கண்களைத் திறந்தருளும்" (14:4, 5)

ஒருமுறை நான், ஒரு கல்லூரியின் பாடல்குழுவின் போட்டித் தேர்வுக்குச் சென்றிருந்தேன். மாணவர்கள் தங்கள் கைகளில் பாடல் தாள்களுடன் வந்தனர். சிலர் தங்கள் துணைக்கருவிகளையும் கொண்டு வந்திருந்தனர். பெரும்பாலானவர்கள், தங்கள் முறை வருவதற்கு முன் குரல் பயிற்சியை மேற்கொள்வதற்காகத் தனியிடங்களைக் கண்டறிய முயற்சி செய்தனர். கடைசியில், இசையில் அறிவும் பாடுவதில் குறிப்பிட்ட திறமையும் கொண்டவர்கள் மாத்திரம் பாடல் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இருப்பினும், 14ம் அதிகாரத்தின் மேன்மையான பாடலைப் பொறுத்தமட்டில், "உங்களால் பாட முடியுமா?" அல்லது "நீங்கள் எந்த அளவுக்கு முறையான இசைப் பயிற்சி கொண்டுள்ளீர்கள்?" என்பதல்ல, ஆனுல் "நீங்கள் எவ்வகையான நபராக இருக்கின்றீர்கள்?" என்பதே கேள்வியாக இருந்தது. யோவான் பின்வருமாறு கூறினார்,

> ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே; கற்புள்ளவர்கள் இவர்களே; ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே; இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை; இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள் (வசனங்கள் 4, 5).

*144,000 என்பதை நேரடி அர்த்தமான எண் என்று சிலர் ஏற்படுத்த முயற்சி செய்துள்ளனர்.[29] எடுத்துக்காட்டாக, 144,000 பேர் என்பவர்கள், ஆவிக்குரிய வகையில் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் என்றும் இவர்கள் மாத்திரமே பரலோகத்திற்குத் செல்லுவார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர், உண்மையுள்ளவர்களாக எஞ்சியிருப்பவர்கள், புதுப்பிக்கப்பட்ட பூமியில் மனநிறைவுடன் இருக்கவேண்டும் என்றும் இவர்கள் கூறுகின்றனர். இவர்கள், "144,000" என்ற எண்ணை நேரடி அர்த்தம் கொண்டதாக்கு வார்கள் என்றால், சீர்பொருத்தம் கொண்டிருப்பதற்கு இவர்கள், அடையாளத்துவத்தின் எஞ்சிய பகுதியையும் நேரடி அர்த்தம் கொண்டதாக ஏற்றுக்கொண்டாக வேண்டும். 7ம் அதிகாரத்தின்படி, 144,000 பேர் யாவரும் யூதர்களாய் இருந்தனர், மற்றும் 14ம் அதிகாரத்தின்படி இந்த 144,000 பேரும் ஒருக்காலும் பாலுறவு கொண்டிராத ஆண்களாய் இருந்தனர்: அதாவது, பெண்களையே அறியாத 144,000 யூத ஆண்கள்! அந்தத் தகுதிப்படுத்தும் நிபந்தனைகள் - இந்த எண் நேரடி அர்த்தம் கொண்டுள்ளதென்று வலியுறுத்தும் குழுக்களின் தலைவர்கள் உட்பட - நான் அறிந்துள்ள ஒவ்வொருவரையும் நீக்கிப்போடுகிறது.*

*மிக உயர்வான பரிசுத்தவான்களைப் பற்றி விவரித்தல் என்பது 4, 5 வசனங்களின் நோக்கமாக இருப்பதில்லை. மாறாக, மிருகத்தின்மீது வெற்றிகொள்வதற்குத் தேவையான பண்பின் வகையை வரைக் குறிப்பிடுதல் என்பதே அவற்றின் நோக்கமாக உள்ளது.*

**உண்மையுள்ளவர்கள்**

*முதல் பண்பு, பின்வரும் வார்த்தைகளில் விளக்கப்படுத்தப்பட்டுள்ளது: ''ஸ்திரீகளால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள் இவர்களே, கற்புள்ளவர்கள் இவர்களே'' (வசனம் 4அ). மூலகிரேக்க வசனத்தில் இவ்வாக்கியத்தின் கடைசிப் பகுதி, "ஏனெனில் இவர்கள் கற்புள்ளவர் களாய் இருக்கின்றனர்" என்றுள்ளது.*

*விளக்கவுரையாளர்கள் பலர் யோவானின் வார்த்தைகளை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொண்டு, யோவான் திருமணமான நிலையைக் காட்டிலும், திருமணமாகாத நிலையை (பிரம்மச்சரியத்தை) மிகவும் தேவபக்திக்கு உரியதாகக் கருதினார் என்பதில் மனநிறைவடைகின்றனர் என்பது திகைப்புக்கு உரியதாக இருக்கிறது.[30] அந்த நம்பிக்கை பிற்காலத்தில் எழும்பிற்று,[31] ஆனால் அது தொடக்கால சபையில் நிலவியிருந்ததில்லை. வேதாகமத்தின் தொடக்கம் முதல் முடிவு வரையிலும், திருமணம் என்பது பரிசுத்தமானதாகவும் ஆசீர்வதிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதாம் திருமணமற்ற நிலையில் இருந்தபோது தேவன், ''மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதியாகமம் 2:18). இயேசுவுடன் சபைக்கு உள்ள உறவைப் பவுல், ஒரு கணவருக்குத் தமது மனைவியுடன் உள்ள உறவுக்கு ஒப்பிட்டார் (எபேசியர் 5:22-33).[32] கர்த்தருடைய சபையை நடத்துகின்றவர்கள் திருமணமான மனிதர்களாய் இருக்க வேண்டும்*

(1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:6).[33] எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதா ... யுமிருப்பதாக" என்று கூறினார் (எபிரெயர் 13:4அ).[34]

சந்தர்ப்பப்பொருளில் எடுத்துக் கொள்ளப்படும்போது, 4ம் வசனத்தின் தொடக்க வார்த்தைகள், ஆவிக்குரிய தூய்மையையே முதன்மையாகக் குறிப்பிடுகின்றன. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேல் மக்களினம் தேவனுடைய மணவாட்டி என்று குறிப்பிடப்பட்டது, மற்றும் அந்த இனத்தின் உண்மையற்ற தன்மையானது விபசாரம் என்று அழைக்கப்பட்டது. (எரேமியா 3:6; ஓசியா 4:12ஐக் காணவும்.) இதே உருவகம் புதிய ஏற்பாட்டில் சபையைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சபையின் உறுப்பினர்களிடத்தில் பவுல், "நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்குத் தேவ வைராக்கியங்கொண்டிருக்கிறேன்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 11:2).[35] யாக்கோபு, உண்மையற்ற கிறிஸ்தவர்கள் "விபசாரிகள்" என்று குறிப்பிட்டார் (யாக்கோபு 4:4). நாம் தற்போது படித்துக் கொண்டுள்ள அதிகாரத்தில், பிசாசின் சூழ்ச்சிகளுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் "வேசித்தனம் கொண்டவர்கள்" என்று அழைக்கப் படுகின்றனர் (வெளிப்படுத்தின விசேஷம் 14:8).[36]

சபையென்பது பொதுவாகப் பெண்மைச் சொற்றொடர்களில் (1 கொரிந்தியர் மற்றும் எபேசியர் நிருபங்களில் கிறிஸ்துவின் மணவாட்டி என்றும், வெளிப்படுத்தின விசேஷம் 12ல் பெண் என்றும்) பொதுவாகப் பேசப்பட்டிருக்கையில், 14:4ன் உருவகத்தில் அது ஆண்களைக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளது ஏன் என்று பல எழுத்தாளர்கள் ஆச்சரியப்பட்டுள்ளனர்.[37] இதற்கான பதில் 8ம் வசனத்தில்காணப்படுகிறது, இவ்விடத்தில் மகா பாபிலோன் குறிப்பிடப்பட்டுள்ளது. 17ம் அதிகாரத்தில் பாபிலோன் ஒரு வேசி என்று, பெண் விபசாரி என்று சித்தரிக்கப்பட்டுள்ளது - மற்றும் ஆண்களைக் கெடுப்பது என்பதே ஒரு வேசியின் வாழ்வினுடைய நோக்கமாக உள்ளது. 144,000 பேர் இந்த வேசியின் அழைப்பைப் புறக்கணித்தனர் என்று 14:4 வலியுறுத்துகிறது. தெளிவான சொற்றொடர்களில், அவர்கள் செசாரின் சொரூபத்திற்கு முன்பு பணிந்து கொள்ளாதிருந்தனர். அவர்கள் தங்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருந்தனர்!

சற்று நேரத்திற்கு முன்பு நான், 4ம் வசனத்தின் தொடக்க வார்த்தைகள், ஆவிக்குரிய தூய்மையையே முதன்மையாகக் குறிப்பிடுகின்றன என்று கூறினேன். புறதெய்வ வணக்கத்துடன் தொடர்புடைய ஒழுக்கவீனத்தைக் கருத்தில் எடுத்துக்கொள்ளும்போது, ஒரு கிறிஸ்தவர் பேரரச வணக்கத்தில் பங்கேற்பதால் ஆவிக்குரிய விபசாரம் செய்தால், அவர் அனேகமாக சரீரத்திற்குரிய வேசித்தனத்தையும் செய்பவராய் இருப்பார். வெற்றி கொண்டவர்கள், ஒவ்வொரு வகையிலும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்திருந்தனர் என்று 4ம் வசனம் வலியுறுத்துகிறது. "இருதயத்தில் [மற்றும் வாழ்வில்] சுத்தமுள்ளவர்கள் (மாத்திரமே) பாக்கியவான்கள், அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத்தேயு 5:8ஐக் காணவும்).

*பின்பற்றுபவர்கள்*

*4ம் வசனத்தின் முதல் பகுதி, வெற்றியை ஆதாயப்படுத்துவதற்கு ஒரு எதிர்மறையான குணத்தைத் தந்தது: 144,000 பேரும் குறிப்பிட்ட நடைமுறைகளில் இருந்து விலகியிருந்தனர். இவ்வசனத்தின் அடுத்த பகுதியானது ஒரு நேர்மறையான தேவையைத் தருகிறது: "ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே" (வசனம் 4ஆ).*

*பழங்காலத்தில் எபேசு இருந்த இடத்திற்கு நான் சென்றபோது, எனது பயணக்குழுவிற்கு, நகரத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியில் விபசாரம் நடந்த வீடு ஒன்றின் சிதிலங்கள் காண்பிக்கப்பட்டது. அதிலிருந்து சுமார் நூறு கெஜங்கள் தூரத்தில், சலைவைக்கல் சாலையில், தொழில்ரீதியான வேசியொருத்தியின் காலடித்தடங்கள் அந்த வியாபாரம் நடக்கும் இடத்தைச் சுட்டிக்காண்பிக்கும் வகையில் செதுக்கப்பட்டிருந்தன. அந்தக் காலடித்தடங்களின் அருகில், ''என்னைப் பின்பற்றிவா'' என்ற எழுத்துக்கள் கல்லில் செதுக்கப்பட்டிருந்தன. 14:4ன் முதல் பகுதியானது, வெற்றிபெற்றவர்கள் "மகா வேசியை" (17:1) பின்பற்றாதிருந்தனர் என்று வலியுறுத்தியது; அவர்கள் இயேசுவைப் பின்பற்றினர் என்று இப்போது நமக்குக் கூறப்படுகிறது.*

*இதைக்காட்டிலும் அதிகம் வற்புறுத்தும் அறைகூவல் ஒன்றை இயேசு ஒருக்காலும் கொடுத்ததில்லை: ''என்னைப் பின்செல்.''[38] இயேசுவைப் பின்பற்றுதலில், கடந்தகாலத்துடனான பிணைப்புக்களை முறித்துப்போடுதலும், எல்லா விஷயங்களிலும் அவரை முன்வைத்தலும் உள்ளடங்குகின்றன. இன்னமும் இயேசு, "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறுகின்றார் (மாற்கு 8:34; வசனங்கள் 35-37ஐக் காணவும்). 144,000 பேர் இயேசுவின் அறைகூவலை ஏற்றுக்கொண்டு, அவர் சென்ற இடங்கள் யாவற்றுக்கும் அவரைப் பின்பற்றிச் சென்றிருந்தனர் - துன்புறுதலுக்கு, மரணம் அடைவதற்கும் கூட அவர்கள் அவரைப் பின்பற்றியிருந்தனர்.*

*ஒரு மறுப்பை நான் முன் எதிர்பார்க்கின்றேன்: ''ஆனால் கர்த்தர் நம்மிடத்தில் இருந்து அவ்வகையான அர்ப்பணித்தலை நிச்சயமாக எதிர்பார்ப்பதில்லை.'' இதைப்பற்றி நீங்கள் நிச்சயமாக அறிந்து இருக்கின்றீர்களா? பேதுரு, ''இதற்காக நீங்கள் அழைக்கப் பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்று எழுதினார் (1 பேதுரு 2:21).*

> *ஒருநாள் மாலையில், பெல்ஜியன் காங்கோவில் ஒரு ஊழியத்தளத்தில், அந்த நாட்டைச் சேர்ந்தவராய் இருந்து மனமாற்றப்பட்ட ஒருவர், "கர்த்தராகிய இயேசுவே, நீர் ஒரு ஊசியாக இருக்கின்றீர், நான் [நூலாக] இருக்கின்றேன்" என்று ஜெபித்தார். இது*

ஊழியக்காரருக்கு ஒரு வினோதமான மொழிநடையாகக் காணப்பட்டது, எனவே அவர் அந்த மனிதரின் வழக்கத்திற்கு மாறான வார்த்தைகளின் மூலம் அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்று கேட்டார். அந்த மனிதர் அதே நாளில் ஊழியப்பள்ளிக்குச் சென்று, அங்கு பெண்கள் தையல் தொழில்செய்தலைக் கண்டிருந்தார். அங்கு, நூலானது எப்போதுமே ஊசியைப் பின்தொடர்வதாக இருந்தது அவருக்கு ஆர்வமான காட்சியாக இருந்தது. அவ்வாறே, அவர் தம்மை இயேசு வழிநடத்தும் எவ்விடத்திற்கும் செல்லத் தயராக இருந்தார்.[39]

இயேசு எங்கெல்லாம் வழிநடத்துகின்றாரோ, அங்கெல்லாம் அவரைப் பின்பற்றுதல் என்பது உங்களுக்கும் எனக்கும் அவசியமானதாக உள்ளது. 144,000 பேரும், மரணம் வரையிலும்கூட ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்ற மனவிருப்பமாய் இருந்த காரணத்தால், அவர்கள் சீயோன் மலையின் வெற்றியின் நடைமேடைக்கு[40] அவரைப் பின்பற்றும்படி அனு மதிக்கப்பட்டிருந்தனர்!

**முதல் பலன்**

144,000 பேரும் ஆட்டுக்குட்டியானவரை, ‘‘மரண இருளின் பள்ளத்தாக்கிலே’’ பின்பற்றியிருக்கலாம் (சங்கீதம் 23:4), ஆனுல் அவர்கள் தங்கள் வெற்றிக்குத் தங்களைக் காரணமாகக் கூறிக்கொள்ளவில்லை. அவர்கள், ‘‘இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டி யானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்’’ (வசனம் 4இ) - இயேசுவின் இரத்தத்தினால் கிரயம் கொள்ளப்பட்டு மீட்கப்பட்டவர்கள் (நடபடிகள் 20:28; 1 கொரிந்தியர் 6:19, 20; எபேசியர் 1:7; 1 பேதுரு 1:18, 19) - என்று உணர்ந்து அறிந்திருந்தனர்.

“முதற்பலன்’’ என்பது ஆர்வமிகுந்த சொல்விளக்கமாக உள்ளது, இது பழைய ஏற்பாட்டைப் படித்துள்ளவர்களுக்கு விசேஷித்த அர்த்தம் உடையதாக உள்ளது. தொடக்கத்தில், இந்தச் சொற்றொடர், தேவனுக்குப் பலிசெலுத்துவதற்கென்று கொண்டுவரப்பட்டதான, விளைச்சலின் முதல் பலனைக் குறிப்பிட்டது. இதைப்பற்றி தெளிவான முதல் குறிப்பு யாத்திராகமம் 23:19ல் உள்ளது: “உன் நிலத்தின் முதல் விளைச்சல்களில் முதற் கனியை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வருவாயாக.’’ இருப்பினும், காலங்கள் சென்றபோது, இந்தச் சொற்றொடர், விளைச்சலில் தேர்ந்துகொள்ளப்பட்ட பகுதியைக் குறிப்பிடுவதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது.[41] இந்தக் கருத்தில், இது இஸ்ரவேல் மக்களில் உண்மையுள்ளவர்களுக்கும் (எரேமியா 2:3), உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கும் (யாக்கோபு 1:18) பயன்படுத்தப்பட்டது. ரோமப்பேரரசு, கிறிஸ்தவர்களைப் பயனற்றவர்களைக் காட்டிலும் மோச மானவர்கள் என்று கருதியிருக்கலாம், ஆனால் அவர்களைத் தேவன், மிகச்சிறந்த, மிகநேர்த்தியான மக்கள் என்று வகைப்படுத்தியிருந்தார்!

**மாசில்லாதவர்கள்**

நீங்கள் உங்கள் வாழ்வை, 144,000 பேரின் பண்புகளுடன்

ஒப்பிட்டிருந்தால், போதுமற்ற தன்மை என்பதன் உணர்வுகளுடன் நீங்கள் தள்ளாடியிருக்கலாம். அப்படியிருந்தால், கடைசி பண்பானது கீழே விழத்தள்ளும் அடியொன்றைத் தரமுடியும்: "இவர்களுடைய வாயில் கபடம் காணப்படவில்லை; இவர்கள் ... மாசில்லாதவர்களாயிருக்கின் றார்கள்" (வசனம் 5). இவ்விடத்தில், NASB வேதாகமத்தில் "blameless," என்றிருக்கையில் KJV வேதாகமத்தில் "without fault," என்றுள்ளது; RSV வேதாகமத்தில் "spotless," என்றுள்ளது; CEV வேதாகமத்தில் "innocent" என்றுள்ளது. "இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை"? "Blameless," "without fault," "spotless," "innocent"? நாம் ஒருபோதும் பூரணமானவர்களாக இருக்கப்போவதில்லை என்பதால், "முயற்சி செய்யக் காரணமே இல்லை" என்று கூவும்படி சோதிக்கப்படுகின்றோம்!

"Blameless" என்பது "பூரணத்தன்மை" அல்லது "பாவமற்ற தன்மை" என்று அர்த்தப்படுவதில்லை. யோவானேகூட, "நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" என்று கூறினார் (1 யோவான் 1:8). நமது பாவங்களைக் கழுவிப்போடுகின்ற இயேசுவின் இரத்தமே நம்மைத் தேவனு டைய பார்வையில் "மாசில்லாதவர்கள்" ஆக்குகிறது (1 யோவான் 1:7). கொலோசெயில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "... உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" என்று கூறினார் (கொலோசெயர் 1:21).

இருப்பினும், இந்தச் சொற்றொடர், நாம் நம்மால் இயன்ற அளவுக்கு மிகமேன்மையானவர்களாய் இருக்கும்படி பிரயாசப்படுவோம் என்று மறைமுகமாய் உணர்த்துகிறது. "மாசில்லாதவர்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, பலியாகப் பயன்படுத்தப்படத் தகுதியான ஒன்றைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.[42] (லேவியராகமம் 22:20ஐக் காணவும்.) நம் ஒவ்வொருவருக்கும் பவுல் பின்வருமாறு அறைகூவல் விடுத்தார்,

> அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1, 2).

"இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை" என்பதே 144,000 பேரின் மாசில்லாத தன்மை என்று கர்த்தரால் மதிக்கப்பட்டுள்ளது (சங்கீதம் 32:2; ஏசாயா 53:9; செப்பனியா 3:13; 1 பேதுரு 2:22; வெளிப்படுத்தின விசேஷம் 22:15), ஆனால் பொய்கூறுவதற்குச்

*சோதிக்கப்படுதல் என்பது யோவானின் நாட்களில் விதிவிலக்கான வகையில் பலம்வாய்ந்ததாக இருந்திருக்க வேண்டும்: கிறிஸ்தவரிடத்தில், செசாரை ''ஆண்டவர்'' என்று அழைக்கும்படிக் கூறப்பட்டபோது, ''நிச்சயமாகத் தேவன், நான் மரிப்பதை விரும்பமாட்டார். என்னைச் சார்ந்துள்ள மனைவியும் பிள்ளைகளும் எனக்கு இருக்கின்றனர். நான் ரோம அதிகாரிகளை வஞ்சித்து, இன்னும் கிறிஸ்தவனாகவே வாழமுடியும், கிறிஸ்தவனாக ஆராதிக்க முடியும், கிறிஸ்தவனாக ஊழியம் செய்ய முடியும். நிச்சயமாகவே தேவன், நான் மரிப்பதை விரும்பவில்லை'' என்று அவர் நியாயப்படுத்திக் கொள்வது சுலபமாய் இருந்திருக்கும். ஒருவேளை இந்த சோதனையே, பரிசுத்த ஆவியானவர், ''... பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' என்று அறிவிக்கக் காரணமாய் இருந்திருக்கலாம் (21:8).[43] பொய்நாவு வெற்றியின் பாடலை ஒருக்காலும் பாட இயலாது!*

*4 மற்றும் 5ம் வசனங்கள் இரட்சிக்கப்பட்டவர்களின் பண்பை வெளிப்படுத்துகின்றன; அவைகள், நாம் எவ்வகையான கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டும் என்று நமக்குக் கூறுகின்றன. இவ்வசனங்கள் உங்களை ஊக்கம் இழக்கச் செய்யாது, மாறாக இவைகள் உங்களை ஒரு மேன்மையான நபராக இருக்கும்படி அறைகூவல் விடுக்கும் என்று நான் நம்புகின்றேன்.*

> *இலண்டனில் உள்ள பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில், அவர்கள் அப்பொல்லோவின் சிலை ஒன்றை வைத்துள்ளனர். அப்பொப்லொ என்பவன் மனிதத்துவத்தின் மாபெரும் மாதிரியாக இருக்கின்றான். அங்கு சென்று அந்தச் சிலையைப் பார்க்கும் மனிதர்களை அவர்கள் கவனித்தனர் ... . மனிதர்கள் அங்கு செல்லும்போது கூனிக் குறுகி சென்று, பின்பு அவர்கள் அங்கு வந்தபோது இருந்ததைக் காட்டிலும் மிகவும் விரைப்பாக நடந்து சென்றனர். ஒருவேளை நாம் என்னவாக இருக்கவேண்டுமோ, அதைத் தொடர்ந்து முகமுகமாய் எதிர் கொண்டால், நாம் முன்னைக் காட்டிலும் அதிக விரைப்பாகச் செல்வோமோ?[44]*

*''கர்த்தாவே, பண்பின் முக்கியத்துவத்திற்கு எங்கள் கண்களைத் திறந்தருளும்.''*

## *முடிவுரை*

*14ம் அதிகாரத்தின் மூன்று பிரிவுகள் ஒவ்வொன்றும் ''மற்றும் நான் கண்டேன்'' அல்லது ''மற்றும் நான் கண்ணோக்கினேன்'' என்ற வார்த்தைகளைக் கொண்டிருக்கின்றன என்று நான் முன்னமே குறிப்பிட்டேன். நான் இந்த அதிகாரத்தைப் படித்துக் கொண்டிருக்கையில், யோவான் ஒவ்வொரு தரிசனத்தையும் கண்ணோக்க வேண்டியிருந்தது மட்டுமின்றி, அவர் மேலே கண்ணோக்கவும் வேண்டியிருந்தது என்பது என்னைத் தாக்கிற்று.[45] முதல் பகுதியில் அவர், சீயோன் மலையின் உச்சியின் மேல் கண்ணோக்க வேண்டியிருந்தது (வசனம் 1). இரண்டாவது பகுதியில்*

அவர், மூன்று தூதர்கள் தங்களின் அறிவிப்பை வெளியிடுவதைக் காண்பதற்கு வானங்களை நோக்கி மேலே கண்ணோக்க வேண்டியிருந்தது (வசனம் 6). மூன்றாவது பகுதியில் அவர், மனுஷகுமாரன் மேகங்கள் மேல் நிற்பதைக் காண்பதற்கு வானத்தைப் பார்க்கும்படிக் கூறப்பட்டார் (வசனம் 14). இவ்விடத்தில் நமக்குப் பாடம் ஒன்றிருக்கலாம்: நாம் நம்மைச் சுற்றிலும் நடப்பவைகளினால் மூழ்கடிக்கப்படும்போது, நாம் நமக்கு மேலே உள்ளவை எவை என்று காண்பதற்கு நமது கண்களை உயர்த்த வேண்டியிருக்கலாம். சங்கீதக்காரர் பின்வருமாறு எழுதினார்:

> எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும். உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார் … .
>
> கர்த்தர் உன்னை காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்; கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார் (சங்கீதம் 121:1-8).

"வெளிக்கண்ணோக்கு மோசமாகக் காணப்படுகிறபோது, மேலே கண்ணோக்க முயற்சி செய்யுங்கள்" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.

"கர்த்தாவே, நேர்மறையான எண்ணப்போக்கின் வகைக்கு எங்கள் கண்களைத் திறந்தருளும்!"[46]

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

13 மற்றும் 14ம் அதிகாரங்களை நீங்கள் ஒப்பிட்டால், பல நேர்மாறுகளை நீங்கள் காண்பீர்கள்: கடலில் இருந்தும் பூமியில் இருந்தும் இரண்டு மிருகங்கள் வந்தன; ஆட்டுக்குட்டியானவர் மலையின் மீது இருந்தார். மக்கள் போலியான ஒரு ஆட்டுக்குட்டியினால் வஞ்சிக்கப்பட்டனர்; 144,000 பேர் உண்மையான ஆட்டுக்குட்டியைப் பின்பற்றியிருந்தனர். மக்கள் கூட்டத்தினர் தங்கள் நெற்றிகளில் ஒரு அடையாளத்தைப் பெற்றிருந்தனர்; இரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் நெற்றிகளில் ஒரு நாமத்தைப் பெற்றிருந்தனர். கும்பலானது, "மிருகத்திற்கு ஒப்பானவன் யார்?" என்று உச்சாடனம் செய்தது; மீட்கப்பட்டவர்கள் ஒரு புதுப்பாட்டைப் பாடினர். அதிகாரம் முழுவதிலும் நேர்மாறுகள் தொடருகின்றன; அடுத்த இரண்டு பாடங்களிலும் நீங்கள் மற்ற நேர்மாறுகளைக் காண்பீர்கள். எடுத்துக்காட்டாக, மிருகத்தைப் பின்பற்றினவர்கள் பாதுகாப்பாய் இருந்ததாகத் தோன்றியது, ஆனால் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றினவர்கள் உண்மையில் பாதுகாப்பாக

இருந்தனர். இந்த நேர்மாறுகளைக் காண்பிக்கும் ஒரு வரைவட்ட வணையை ஏற்படுத்த நீங்கள் விரும்பலாம்.

இந்தப் பாடத்திற்குப் பின்வருபவை போன்ற மற்ற தலைப்புகளைப் பயன்படுத்த முடியும், "ஒரு புதுப்பாட்டு," "வரலாற்றின் எஞ்சிய பகுதி," அல்லது "சித்திரத்தின் மறுபக்கம்." W. B. வெஸ்ட் என்பவர், "மேஜைகள் திருப்பப்பட்டுள்ளன" என்ற தலைப்பைப் பயன்படுத்தினார். ரூபெல் ஷெல்லி என்பவர், "வெற்றிமுழங்கும் ஆட்டுக்குட்டி" என்ற தலைப்பை இந்தப் பகுதிக்குப் பயன்படுத்தினார். ''வெற்றியாளர்களுக்கும் மேலானவர்கள்" என்பதும் (ரோமர் 8:37 KJV) ஏற்புடைய தலைப்பாகவே காணப்படுகிறது. ஆல்பர்ட் பால்டிங்கர் என்பவர் வார்த்தை விளையாட்டு ஒன்றைப் பயன்படுத்தினார்: "ஒரு பழைய பாடல்" (வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், பழைய ஆனால் எப்போதும் புதிதாக உள்ள ஒரு பாடல்). 144,000 பேர் தேவனுடைய நாமத்தை அணிந்திருப்பதால், வில்லியம் பார்கலே என்பவர் "பிதாவுக்குச் சொந்தமானவர்கள்" என்று அவர்களை அழைத்தார். நீங்கள் வாழும் இடத்தில் பின்வரும் சொற்றொடர் அர்த்தம் கொண்டுள்ளது என்றால், நீங்கள் ''புத்துணர்வூட்டும் இடைவேளை" என்ற தலைப்பை விரும்பலாம்.

சார்லஸ் ரைரீ என்பவர், 14ம் அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களைப் பின்வருமாறு பிரித்தார்: சூழ்நிலை (வசனம் 1), பாடல் (வசனங்கள் 2, 3), பிரித்தல் (வசனம் 4அ, ஆ). இரட்சிப்பு (வசனம் 4இ), பரிசுத்தமாக்கப்படுதல் (வசனம் 5). மையர் பேர்ல்மென் என்பவர் இதேபோன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தி, மீட்கப்பட்டவர்கள் பாதுகாப்பாக, பாடிக்கொண்டு, பரிசுத்தமாக்கப்பட்டிருந்தனர் என்று கூறினார்.

14ம் அதிகாரத்தின் மூன்று பிரிவுகளையும் மூன்று பிரதானக் கருத்துக்களாக்கி, இந்த அதிகாரம் முழுவதும் ஒன்றாகப் படிக்கப்படலாம். வார்ரென் வயர்ஸ்ப் என்பவர் ''வெற்றியின் குரல்கள்'' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார். ''குரல்கள்'' என்ற கருத்தைப் பயன்படுத்தி, நீங்கள் "துதியின் குரல்கள்" (வசனங்கள் 1-5), "எச்சரிக்கையின் குரல்கள்'' (வசனங்கள் 6-13), மற்றும் ''நியாயத்தீர்ப்பின் குரல்கள்'' (வசனங்கள் 14-20) என்பவை பற்றிப் பேச முடியும்.

இந்த அதிகாரத்தை ஏழு பிரிவுகளாவும் பிரிக்க முடியும்: (1) வசனங்கள் 1-5; (2) வசனங்கள் 6, 7; (3) வசனம் 8; (4) வசனங்கள் 9-11; (5) வசனங்கள் 12, 13; (6) வசனங்கள் 14-16; (7) வசனங்கள் 17-20. இந்தப் பிரிவுகளை, பிராங்க் பேக் என்பவர் "மனுஷ குமாரனின் ஏழு தரிசனங்கள்" என்று அழைத்தார்.

---

குறிப்புகள்

[1]KJV, RSV மற்றும் பல மொழிபெயர்ப்புகளில் ''சீரியா'' என்றுள்ளது (2 இராஜாக்கள் 6:11). சீரியா அல்லது ஆராம் என்ற நாடு, பலஸ்தீனத்தின் வடபகுதியில் இருந்தது. [2]சிலர், 14ம் அதிகாரத்தை ஏழு பிரிவுகளாக பிரிக்கின்றனர்.

இந்தப் பாடத்தின் முடிவில் தரப்பட்டுள்ள “போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்” என்ற பகுதியில் காணவும். [3]மூல வசனத்தில், 1, 6 மற்றும் 14ம் வசனங்கள் “and I saw” என்று அர்த்தப்படுகிற ஒரேவிதமான இரண்டு கிரேக்க வார்த்தைகளைக் கொண்டு தொடங்குகின்றன. NASB வேதாகமத்தில், 1 மற்றும் 14 ஆகிய வசனங்களில் “I looked” என்றுள்ளது, ஆனால் 6ம் வசனத்தில் “I saw” என்றுள்ளது. [4]இந்த பாடத்தைத் தொடர்ந்து வரும் “ஆகாய நடுவில் பிரசங்க மேடை,” மற்றும் “அறுவடை நேரம்!” என்ற இரண்டு பாடங்களிலும் காணவும். [5]“Zombie-like devotees” என்ற சித்தரிப்புவடிவச் சொற்றொடரைப் புரிந்துகொள்ளக்கூடிய பார்வையாளர்கள் எவர் மத்தியிலும் இதைப் பயன்படுத்தலாம் (Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series [Lubbock, Tex.: International Biblical Resources, 1976], 214). [6]1 மற்றும் 14 ஆகிய வசனங்களில் உள்ள ‘‘இதோ’’ என்ற வார்த்தையானது, பின்தொடரவிருந்த தரிசனத்தின் திகைக்கச் செய்யும் இயல்பை வலியுறுத்துகிறது. [7]“வெளிப்படுத்தின விசேஷம், 2” என்ற புத்தகத்தில் “புயலின் மையத்தில் அமைதி” என்ற பாடத்தில் காணவும். [8]‘‘144,000’’ என்ற எண்ணின் அடையாளத்துவ அர்த்தத்தை ‘‘வெளிப்படுத்தின விசேஷம், 1’’ என்ற புத்தகத்தில் காணப்படும், “இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன” என்ற பாடத்திலும், “வெளிப்படுத்தின விசேஷம், 2” என்ற புத்தகத்தில் ‘‘புயலின் மையத்தில் அமைதி’’ என்ற பாடத்திலும் காணவும். [9]2 சாமுவேல் 5:6-10; 1 இராஜாக்கள் 8:1; 1 நாளாகமம் 11:5 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். கடைசியில் “சீயோன்” மற்றும் “எருசலேம்” என்ற சொற்றொடர்கள் ஒருபொருட் பல சொற்றொடர்களாகப் பயன்படுத்தப்பட்டன (2 இராஜாக்கள் 19:21, 31; ஏசாயா 2:3). “சீயோன்” என்பது “தாவீதின் நகரமாக” இருந்தது (1 இராஜாக்கள் 8:1; 2 நாளாகமம் 5:2). [10]யூதர்கள் சீயோனைப் பற்றி எவ்வாறு உணர்ந்தனர் என்பதை மதிப்பதற்கு, ஒத்தவாக்கிய அகராதி ஒன்றில் “சீயோன்” என்ற வார்த்தையைக் கண்ணோக்கவும். விசேஷமாக, சங்கீதங்களிலும் தீர்க்கதரிசனங்களிலும் இந்த வார்த்தையின் பயன்பாட்டைப் பற்றிப் படிக்கவும். உதாரணமாக, சங்கீதம் 9:11; 48:2, 3; 76:2; 87:2; 125:1; 132:13 ஆகிய வசனங்களைக் காணவும்.

[11]“சீயோன்” என்பது பற்றித் தீர்க்கதரிசிகளின் மற்ற பயன்பாடுகளுக்கு, ஏசாயா 2:2-4; 40:9; யோவேல் 2:32; மீகா 4:2; சகரியா 8:1-3 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். [12]இவ்வசனப்பகுதி, பரலோகத்திற்குரிய அம்சமும் பூமிக்குரிய அம்சமும் உடையதான, தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிப் பேசுகிறது: சபை பூமிக்குரிய அம்சமாக உள்ளது; பரலோகம் என்று நாம் பொதுவாக நினைப்பது பரலோகத்திற்குரிய அம்சமாக உள்ளது. இவ்வசனத்தின் கடைசிப் பகுதியானது, தூதர்களும் மனிதர்களும் உள்ளடங்குகிற அந்த இராஜ்யத்தின் குடியுரிமையைப் பற்றி விவரிக்கிறது. மக்களில் சிலர் இன்னமும் பூமியில் இருந்தனர், மற்றும் சிலர் ஏற்கனவே மரித்திருந்தனர். [13]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation,* The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 132. ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கை எழுத்தாளர்களில் பலர், சீயோன் என்பது “ஆயிரம் ஆண்டு அரசாட்சியில் பூமிக்குரிய இடமாயிருக்கும் என்பதாகப் புரிந்து கொள்கின்றனர் …, ஆனால் இந்தக் காட்சி முழுவதுமே பரலோக அரியணையின் முன்பாக துதி செலுத்தும் காட்சியாக உள்ளது” (Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977], 267). [14]விளக்கவுரையாளர்கள் சிலர், சீயோன் மலையை, வெளிப்படுத்தின விசேஷத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள “யுத்தத்திற்கு” ஆயத்தம் செய்வதற்காகக் “கர்த்தர் தமது சேனையை” ஒன்றுகூட்டும்

இடம் என்று குறிப்பிடுகின்றனர். [15]விளக்கவுரையாளர்களில் சிலர், 144,000 பேர் என்பதை சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் "ஒரு குழு" என்றாக்குகின்றனர். இவர்கள் யாவரும் வேதசாட்சிகளாக மரித்தவர்கள் என்று பலர் வலியுறுத்துகின்றனர். இருப்பினும், வேதசாட்சிகளாக மரித்தவர்கள், தேவனுடைய மற்ற உண்மையான பிள்ளைகளைவிடத் தேவனால் மிக உயர்வாக மதிக்கப்பட்டதாக குறிப்பெதுவும் இல்லை. 144,000 பேரும் தங்கள் விசுவாசத்திற்காக மரிக்க அழைக்கப்பட்டிருப்பினும் இல்லாதிருப்பினும், அவ்வாறு மரிப்பதற்கு மனவிருப்பமாய் இருந்தனர் என்று நாம் பாதுகாப்பாகக் கூறலாம். [16]மற்ற விவாதங்கள் ஏற்படுத்தப்படக்கூடும்: இவர்கள் "பூமியிலிருந்து கிரயம் கொள்ளப்பட்டனர்" (14:3); இவர்கள் "ஜெயங்கொண்டவர்களின்" பலனைப் பெற்றிருந்தனர்; இன்னும் பிற. [17]1 கொரிந்தியர் 15:54; 1 யோவான் 5:4ஐக் காணவும். [18]"குரல்" என்பது ஒருமையில் உள்ளது; ஆனுல் 3ம் வசனத்தில், வசனப்பகுதியானது "அவர்கள்" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளது, எனவே "குரல்" என்பது ஒரு பல்லவியாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. "Phone"என்பதே, "குரல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை என்பது தற்செயலானது (இது "pho-nay" என்று உச்சரிக்கப்படுகிறது), இது "ஒலி" என்பதற்குப் பொதுவான வார்த்தையாக உள்ளது. (இந்த கிரேக்க வார்த்தையானது "telephone"மற்றும் "microphone" போன்ற வார்த்தைகளில் புரிந்துணரப்படுகிறது.) [19]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" என்ற பாடத்தில், சுரமண்டலங்களின் அடையாளத்துவம் மீதான குறிப்புகளைக் காணவும். [20]நாம் 4ம் அதிகாரத்தைப் படித்தபோது மூப்பர்கள் என்பவர்கள், ஜெயங்கொண்ட கிறிஸ்வர்களைக் குறித்தனர் என்று நாம் கருத்துத் தெரிவித்துள்ளபடியால், 14ம் அதிகாரத்தில் ஒரு பிரச்சனையை முன்னிறுத்துகிறது, பின்வரும் கருத்து நோக்கைச் சிந்தித்துப் பாருங்கள்: "ஆனுல் இந்த 24 மூப்பர்களும் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாய் இருந்துகொண்டு, சபையாயிருக்கின்ற 144,000 பேர் முன்பாகப் பாட முடியுமா? ஓ, தாராளமாக முடியுமே. ஒவ்வொரு உருவகமும் தனது சொந்தக் கருத்தைக் கொண்டுள்ளது. சபை என்பது நகரமாகவும் பெண்ணாகவும் இருக்க முடியுமா? அது திருமணமான பெண்ணாகவும் 'நியமிக்கப்பட்ட பெண்ணாகவும்' இருக்க முடியுமா?" (McGuiggan, 217). 12ம் அதிகாரத்தை நாம் படித்த போது, அந்த அதிகாரத்தின் முடிவில், சபையானது பெண் மற்றும் அவளது சந்ததி ஆகிய இரு உருவகங்களாகவும் குறிப்பிடப்பட்டது என்பதை நாம் கவனித்து இருந்தோம். ஆகையால் (மெக்கைகன் என்பவர் கருத்துத் தெரிவித்தபடி) மூப்பர்கள் மற்றும் 144,000 பேர் என்பவை ஒரே விஷயத்தைக் கண்ணோக்குகிற மாறுபட்ட வழிமுறைகளாக மாத்திரம் உள்ளன.

[21]மலையின் தரிசனம் எவ்வாறு இருந்தது மற்றும் அரியணையின் தரிசனம் எவ்வாறு இருந்தது என்பவை துல்லியமாக ஒன்றுகலக்கப்படுவது எவ்வாறு என்று நமக்குக் கூறப்படுவதில்லை. சீயோன் மலை என்பது, தேவனுடைய அரியணை இருக்கும் இடமான பரலோகத்தைப் பற்றிப் பேசப் பயன்படுத்தப்படும் இன்னொரு வழிமுறையாக மாத்திரம் உள்ளது என்பது எனது யூகமாகும். இருப்பினும் சிலர், மலையின்மீது இருந்த 144,000 பேரும் அரியணையை மேல்நோக்கி கண்ணோக்கிக்கொண்டு இருந்தனர் என்று சித்தரிக்கின்றனர். [22]"குரல்" என்பது தூதர்களுடையதாகும் என்றும், 144,000 பேருக்குப் புதுப்பாட்டைத் தூதர்கள் கற்றுத்தந்தனர் என்றும் சிலர் நம்புகின்றனர். 144,000 பேர் என்பது பரலோக பல்லவியாக உள்ளது என்பதே மிகவும் எளிமையான மற்றும் மிகவும் இயல்பான விளக்கமாக உள்ளது. இவர்கள் வெற்றியை நேரடியாக அனுபவித்து இருந்தவர்கள் ஆவர். [23]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும்

"ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" என்ற பாடத்தில், "புதுப்பாட்டு" என்பதற்கான விளக்கங்களைக் காணவும். [24]144,000 பேரால் பாடப்பட்ட புதுப்பாட்டு பற்றிய இன்னொரு குறிப்பிற்கு, அடுத்த அதிகாரத்தில் 15:2-4ல் உள்ள வெற்றியின் பாடலைக் காணவும். [25]Daniel Russell, *Preaching the Apocalypse* (New York: The Abingdon Press, 1935), 185. [26]Myer Pearlman, *Windows Into the Future: Devotional Studies in the Book of Revelation* (Springfield, Mo.: Gospel Publishing House, 1941), 127. இது தொடர்பான ஒரு கலந்துரையாடலுக்கு, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் காணப்படும் "பாவ நகரத்தில் இருந்த சபை" என்ற பாடத்தில், "பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமம்" (2:17) மீதான குறிப்பைக் காணவும். [27]"பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட" என்ற சொல்விளக்கம், இனியும் அவர்கள் பூமியில் இருந்ததில்லை என்று குறிப்பிடலாம் அல்லது இது, கிறிஸ்துவின் இரத்தம் அவர்களை இந்த பூமியில் இருந்து பிரித்தது என்று மாத்திரம் அர்த்தப்படலாம் (யோவான் 17:16). [28]Pearlman, 127. [29]"144,000 பேர்" என்பது நேரடி அர்த்தத்தில் உள்ள எண்ணாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று யெகோவா சாட்சிகள் போதிக்கின்றனர். தொடக்கத்தில், ஏழாம் நாள் அட்வென்ட்டிஸ்டுகள், நேரடி அர்த்தமாக 144,000 பேர் மாத்திரமே பரலோகம் செல்வார்கள் என்று போதித்ததாகவும் எனக்குக் கூறப்பட்டுள்ளது, ஆனால் அவர்களின் சொந்த நிறுவன உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்த எண்ணுக்கு மீறியபோது, அவர்கள் அந்தப் போதனையைக் கைவிட்டுவிட்டனர். [30]இவர்கள் யாவரும் கத்தோலிக்க விளக்கவுரையாளர்கள் அல்ல; சிலர் புரொட்டஸ்டன்டு பிரிவைச் சேர்ந்தவர்களாய் இருந்தனர். ''லிபரல்'' புரொட்டஸ்டன்டு விளக்கவுரையாளர்கள் சிலர், யோவான் அந்த நிலைப்பாட்டைப் பற்றிக்கொண்டதில் சித்தம் கலங்கினவராய் இருந்தார் என்று நினைத்தனர், ஆனால் அவர் இவ்வசனப்பகுதியில் திருமணமாகாதிருக்கும் நிலையைப் பற்றியே போதித்தார் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

[31]இது பவுலினால் முன்னுரைக்கப்பட்டிருந்தது (1 தீமோத்தேயு 4:3) மற்றும் இது, துறவற மடங்கள் மற்றும் கன்னியர் இல்லங்கள் நிலைநாட்டப்படுதலை விளைவித்தது. [32]ஒருமுறை பவுல், "... இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்கும், ..." என்று எழுதினார் (1 கொரிந்தியர் 7:26) - அதாவது "ஸ்திரீயை தொடாதிருக்கும் நிலை" (1 கொரிந்தியர் 7:1ஐக் காணவும்). இருப்பினும், இது, ஒரு தனிப்பட்ட சூழ்நிலைக்கான விசேஷித்த அறிவுரையாக இருந்ததே தவிர, திருமணத்தை முற்றிலும் கண்டனம் செய்வதாக இருந்ததில்லை. [33]சபையின் முதல் நடத்துனர்களான அப்போஸ்தலர்கள் திருமணமானவர்களாகவே இருந்தனர் (மாற்கு 1:30; 1 கொரிந்தியர் 9:5). [34]நான், என் விஷயத்தை மிகையாகக் கூற விரும்பவில்லை. திருமணமாகாத நிலை என்பது திருமணமான நிலையைவிட அதிகம் பரிசுத்தமானதாக இருப்பதில்லை, ஆனால் அதே வேளையில், திருமணமான நிலை என்பது திருமணமாகாத நிலையைவிட அதிகம் பரிசுத்தமானதாக இருப்பதும் இல்லை. திருமணமாகாத நிலையில் உள்ளவர்கள் கர்த்தருக்குத் தனிசிறந்த ஊழியத்தை அர்ப்பணிக்க முடியும் (மத்தேயு 19:10-12ஐக் காணவும்). [35]எபேசியர் 5:25-27ஐயும் காணவும். ரோமர் 7:4 வசனம், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்பட்டுள்ளனர் என்று பேசுகிறது. [36]NASB வேதாகமத்தில் "immorality" என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனத்தில் *porneia* என்ற வார்த்தையே உள்ளது, இது "வேசித்தனம்" என்பதற்கான வார்த்தையாகும் (KJV வேதாகமத்தில் காணவும்). விக்கிரக ஆராதனையை ஒழுக்கவீனம்/வேசித்தனம்/விபசாரம் என்று குறிப்பிடும் மற்ற வசனப்பகுதிகளுக்கு, 17:2, 4; 18:3, 9; 19:2 ஆகிய வசனங்களைக்

காணவும். [37]14:1-5 வசனப்பகுதியானது கர்த்தருடைய சேனையைச் சித்தரிக்கிறது என்று நம்பி இணங்குபவர்கள், பழைய ஏற்பாட்டில் போர்வீரர்கள் யுத்தத்திற்கு முன்னதாகப் பாலுறவு செயல்களில் இருந்து விலகியிருக்க வேண்டியிருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றனர். (உபாகமம் 23:9, 10ஐக் காணவும்.) இதுவே இவ்விடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ள உருவகத்தின் பின்னணியாகும் என்று அவர்கள் நம்புகின்றனர். [38]மாற்கு 2:14; 10:21; லூக்கா 9:59; யோவான் 1:43; 21:19-22 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும். [39]David F. Burgess, comp., *Encyclopedia of Sermon Illustrations* (St. Louis, Mo.: Concordia Publishing House, 1988), 80. "I am the cotton" என்பதே இங்கு பயன்படுத்தப்பட்ட மிகச் சரியான சொற்றொடராய் இருந்தது: சில நாடுகளில், "Cotton" என்பது "நூலை" குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான எந்தச் சொற்றொடரை வேண்டுமானாலும் பயன்படுத்துங்கள். [40]வெற்றியின் மேடை என்ற கருத்தானது உலகம் முழுவதிலும் நன்கு அறியப்படாததால், நான் இதை விரிவாக்கவில்லை. இருப்பினும் ஒலிம்பிக் விளையாட்டில் வெற்றி பெற்றவர் வெற்றிமேடையின்மீது நிற்கையில் அவரது கழுத்தில் பதக்கம் அணிவிக்கப்படுதல் மற்றும் அவரது நாட்டின் தேசியகீதம் இசைக்கப்படுதல் என்பவை, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமானதாயிருந்தால், 14:1-5ன் காட்சியை நீங்கள் மேற்கூறிய உதாரணத்துடன் ஒப்பிடுவதற்கு நீங்கள் விரும்பலாம்.

[41]"முதற்பலன்" என்ற சொற்றொடர், 144,000 பேரும் எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிப்பதில்லை, ஆனால் சபையின் துவக்கத்தின் முதல் நூற்றாண்டில் வாழ்ந்து மரித்தவர்களும், உண்மையுடன் வாழ்ந்து மரித்தவர்களின் அநேகரில் முதன்மையானவர்கள் என்பதாக சிலர் காணுகின்றனர். இந்த விளக்கம் சரியானதாக இருக்கலாம், ஏனெனில் "முதற்பலன்" என்ற சொற்றொடர் இந்தச் சொல்லர்த்தத்தைக் கொண்டிருக்கலாம். (ரோமர் 16:5 KJV; 1 கொரிந்தியர் 15:23; 16:15 ஆகிய வசனங்களைக் காணவும்.) இருப்பினும், " 'முதற்பலன்' என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, விளைச்சலின் பலன் உலகப் பிரகாரமான பயன்பாட்டுக்கென்று விடுவிக்கப்படுவதற்கு முன்பு தேவனுக்கு அடையாளமாகச் செலுத்தப்பட்ட பொருள் என்ற தொடக்க அர்த்தம் கொண்டிருப்பினும், இது LXX (பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்த்) என்ற புத்தகத்தில் காணிக்கை அல்லது கொடை என்பதைக் காட்டிலும் அதிக அர்த்தத்தைக் குறிப்பிடுவதாகப் பெரும்பாலும் இருந்ததில்லை" என்று ஒரு எழுத்தாளர் சுட்டிக் காண்பித்துள்ளார் (Mounce, 271). [42]வெளிப்படுத்தின விசேஷம் 14:5ல், "மாசில்லாத" ("blameless") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை 1 பேதுரு 1:19ல் "குற்றமில்லாத" ("unblemished") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [43]21:27ஐயும் காணவும். [44]McGuiggan, 217. [45]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் காணப்படும் "விஷயங்களைக் கருத்துநோக்கில் இடுதல்" என்ற பாடத்தின் முதல் பிரதானக் கருத்தைக் காணவும். [46]இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், ஒருவர் தமக்கு உதவி மற்றும் நிலைநிறுத்தப்படுதல் ஆகியவற்றிற்காகக் கர்த்தரைச் சார்ந்திருக்கக்கூடுவதற்கு முன்னர், அவர் கர்த்தருடன் கொண்டுள்ள உறவானது நேராக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள். நீங்கள், "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் உள்ள "புயலின் மையத்தில் அமைதி" என்ற பாடத்தில் இருந்து, 144,000 பேர் பற்றிய விஷயங்கள் சிலவற்றை மறுகண்ணோட்டமிட விரும்பலாம். இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், மக்களுக்கு அவர்களின் பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வது எவ்வாறு என்று நீங்கள் கூற

*விரும்புவீர்கள். அவர்கள் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுதிருந்தால், விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றவர்கள் கர்த்தரால் அவரது சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என்று கூறும் நடபடிகள் 2ஐ நினைவுபடுத்துங்கள் (வசனங்கள் 38, 41, 47). சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்ட சரீரமாக இருப்பதால், அவர்களுடன் சேர்த்துக்கொள்ளப்படுதல் என்பது ஒருவரின் பெயர் இரட்சிக்கப்பட்டவர்களின் பட்டியலில் கூட்டப்படுதல் என்பதாக உள்ளது. உங்கள் உரையைக் கேட்பவர்களில் சிலர், ஒருகாலத்தில் ஞானஸ்நானம் பெற்றிருந்து, இப்போது உண்மையற்றவர்களாய் இருந்தால், ஒருவரின் பெயரானது அந்தப்புத்தகத்தில் இருந்து நீக்கிப்படக்கூடும் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுங்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 3:5; யாத்திராகமம் 32:32), மற்றும் அவர்கள் மீளக்கட்டுவிக்கப்படும்படிக்கு அவர்களை உற்சாகப்படுத்துங்கள் (நடபடிகள் 8:22, 23; யாக்கோபு 5:16).*

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *2 இராஜாக்கள் 6ல் இருந்து எலிசாவின் ஊழியக்காரனுடைய வரலாற்றை மறுகண்ணோட்டமிடவும். "நமது கண்கள் திறக்கப்பட" வேண்டிய அவசியம் எப்போதாவது வேண்டியிருக்கிறதா?*
2. *14ம் அதிகாரத்தின் ஆட்டுக்குட்டியானவர் யார்?*
3. *144,000 பேர் என்பவர்கள் யார்?*
4. *144,000 பேர் தங்கள் நெற்றிகளில் ஆட்டுக்குட்டியானவருடைய நாமத்தையும் தேவனுடைய நாமத்தையும் கொண்டிருந்தனர் என்பதன் தனிச்சிறப்பு என்ன?*
5. *சீயோன் மலையின் சுருக்கமான வரலாற்றைத் தரவும் - அது எதனை அடையாளப்படுத்திற்று. 14ம் அதிகாரத்தின் சீயோன் மலை என்பது உலக உருண்டையில் உள்ள ஒரு இடமா அல்லது அது ஆவிக்குரிய கருத்தா?*
6. *144,000 பேர் சீயோன் மலையில் என்ன செய்து கொண்டிருந்தனர்? தேவனுக்குத் துதிபாடுதல் என்பதில் மதிப்பு எதுவும் உள்ளதா? அப்படியென்றால், அது என்ன?*
7. *அவர்களது பாடல், எந்தக் கருத்தில் "ஒரு புதிய பாடலாக" இருந்தது?*
8. *144,000 பேர் தவிர வேறு எவரும் அந்தப் பாடலைக் கற்றுக்கொள்ளக் கூடாதிருந்தது ஏன்?*
9. *4ம் வசனத்தின் முதல் பாகம், திருமணமான நிலையைவிட திருமணமாகாத நிலையானது அதிகம் பரிசுத்தமானது என்று போதிக்கிறதா?*
10. *இயேசுவை உண்மையாகப் பின்பற்றுவதில் உள்ளடங்கியிருப்பது என்ன?*
11. *"முதற்பலன்" என்ற சொற்றொடரின் தோற்றக்கால அர்த்தத்தை*

விளக்கவும். அது அர்த்தப்படுத்த வந்தது என்ன?

12. தேவனுடைய பிள்ளை எந்தக் கருத்தில் "மாசில்லாதவராக" இருக்க முடியும்?
13. விலை எதுவாயிருப்பினும் உண்மையுடன் இருத்தலின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடவும்.



*சீயோன் மலையின்மீது ஆட்டுக்குட்டியானவர் 144,000 பேர்களுடன் நிற்குதல் (14:1)*